# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2025 சனவரி

## (301) நிதி அறிக்கையிடல்

பரீட்சார்த்திகளால் விடப்பட்ட அதிகளவான பொதுவான தவறுகள் இனங்காணப்பட்டுள்ளன. பரீட்சையில் வெற்றியடையாத பரீட்சார்த்திகள் அவர்கள் விட்ட தவறுகளை இனங்காண வேண்டும் என்பதுடன் எதிர்காலப் பரீட்சைகளில் வெற்றியடைவதற்கு அனைத்து கோட்பாடுகள் பற்றியும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்:

## பகுதி A

### வினா இல. 01

**(a)** இந்த வினாவில் கணக்கீட்டுத் தொழிலின் மூன்று புதிய போக்குகளை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வளர்ந்துவரும் போக்குகளின் பொதுவான புரிதல்களை விளக்கியிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் தொழிலின் அண்மைய முன்னேற்றங்களைக் காட்டிலும் காலாவதியான போக்குகளை வழங்கியிருந்தனர். உலகமயமாக்கல், ஒருங்கிணைந்த அறிக்கையிடல், டிஜிடல் மாற்றம், ஏ.ஐ. தொழினுட்பம் தொலைதூர வேலைப் படை போன்றவை.

**(b)** நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகத்தின்படி, நிதிக் கூற்று மூலகங்களின் அளவீட்டிற்காகப் பயன்படுத்தப்படும் இரண்டு அளவீட்டு அடிப்படைகளைக் குறிப்பிடுவதற்கு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். கணிசமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் அளவீட்டு அடிப்படைகளைச் சரியாக இனங்காணத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் அளவீட்டு அடிப்படைகளுக்குப் பதிலாக வரலாற்றுக் கிரயம், சீர் மதிப்பு, நடப்புப் பெறுமதி, பயன்பாட்டுப் பெறுமதி, நடப்புக் கிரயம் போன்ற நிதிக் கூற்றுக்களின் தரம்சார் பண்புகளை எழுதியிருந்தனர். இந்த வெளிப்படுத்தல்கள் நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு வேலைச்சட்டகம் பற்றி போதிய அறிவு காணப்படாததையும் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாததையும் காட்டுகின்றன.

### வினா இல. 02

**(a)** வினாவின் இந்தப் பகுதி நிலைபேற்று அறிக்கையிடலின் பிரதான நோக்கத்தைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் நிலைபேற்று அறிக்கையிடலின் பிரதான நோக்கத்தைச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** இந்தப் பகுதி ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் மூன்று வழிகாட்டற் கோட்பாடுகளைக் கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் கோட்பாடுகளைச் சரியாகக் குறிப்பிடவில்லை, அவர்கள் ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் உள்ளடக்க மூலகங்களுடன் வழிகாட்டற் கோட்பாடுகளைப் போட்டுக் குழப்பியிருந்தனர். இந்த வெளிப்படுத்தல்கள் ஒருங்கிணைந்த அறிக்கையிடல் பற்றிய போதுமான புரிதல் இல்லை என்பதையே காட்டுகிறது.

**வினா இல. 03**

**(a)** இந்தப் பகுதி மொத்த இலாப விகிதம், மற்றும் கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் ஆகியன பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பரீட்சார்த்திகள் மொத்த இலாப விகிதம் மற்றும் கடன்பட்டோர் சேகரிப்புக் காலத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியமான நடவடிக்கைகளை பட்டியலிட எதிர்பார்க்கப்பட்டனர். பல பரீட்சார்த்திகள் சிறந்த கிரயக் கட்டுப்பாடு மற்றும் மேம்பட்ட கடன் முகாமைத்துவம் போன்ற தொடர்புடைய நடவடிக்கைகளை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், மிகச் சில பரீட்சார்த்திகளின் விடைகள் குறிப்பான தன்மை மற்றும் நியாயத் தன்மையைக் கொண்டிருக்கவில்லை.

**(b)** இவ்வினா விகிதப் பகுப்பாய்வின் மூன்று வரையறைகளைப் பட்டியற்படுத்துமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் கணக்கீட்டுக் கொள்கைகளில் உள்ள வேறுபாடுகள் மற்றும் தரம்சார் காரணிகளை விலக்கல் போன்ற பிரதான வரையறைகளைச் சரியாகப் பட்டியலிட்டிருந்தனர். எவ்வாறாயினும், சில விடைகள் சம்பந்தமற்ற விடயங்களை உள்ளடக்கியிருந்தது. இது விகிதப் பகுப்பாய்வின் வரையறைகள் பற்றிய போதுமான அறிவின்மையைக் காட்டுகிறது. சில பரீட்சார்த்திகள் வினாவைக் கவனிக்காது வரையறைகளுக்குப் பதிலாக விகிதப் பகுப்பாய்வின் அனுகூலங்களைப் பட்டியலிட்டிருந்தனர்.

**வினா இல. 04**

இவ்வினா குறிப்பிட்ட கிரயங்கள் LKAS 38 இன் கீழ், அருவச் சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யக்கூடியதா என்பதை விபரிக்கமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் நியமத்தைச் சரியாகப் பிரயோகித்திருந்ததுடன் கிரயமானது அருவச் சொத்தா, இல்லையா என்பதைக் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் அத்தகைய ஏற்பிசைவுக்கான காரணங்களை விபரித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் பயிற்சிக் கிரயத்தை செலவினமாக ஏற்பிசைவு செய்யத் தவறியிருந்தனர்.

பரீட்சார்த்திகள் தலைப்புகள் பற்றிய பொதுவான புரிதலை வெளிப்படுத்தும்போது, அவர்கள் கட்டமைக்கப்பட்ட பதில்களை வழங்குவதற்கும் தெளிவற்ற விளக்கங்களைத் தவிர்க்கவும், தொழினுட்ப எண்ணக்கருக்கள் மற்றும் கணக்கீட்டு நியமங்களில் துல்லியமான அறிவைக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## <u>பகுதி B</u>

**வினா இல. 05**

இவ்வினா நேரில் முறையைப் பயன்படுத்தி 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்வுக் கூற்றைத் தயாரிக்குமாறு கேட்டிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் நன்றாகச் செயலாற்றியிருந்ததுடன் திருப்திகரமான புள்ளிகளையும் பெற்றிருந்தனர். பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான வழுக்கள் கீழ்வருமாறு:

(1) சில பரீட்சார்த்திகள் செயற்படுத்தல், முதலீடு செய்தல் மற்றும் நிதியிடல் நடவடிக்கைகளை தனித்தனியாக வகைப்படுத்துவதற்குத் தவறியிருந்ததுடன் அவற்றை பொதுவான நடவடிக்கை களாகக் குறிப்பிட்டிருந்தனர்.

(2) சிலர் நடவடிக்கைகளைத் தனித்தனியாக வகைப்படுத்தியிருந்த போதிலும், சரியான நடவடிக்கைகளை உரிய இடத்தில் எழுதுவதற்குத் தவறியிருந்தனர். உதாரணமாக, பெறப்பட்ட நீண்ட காலக் கடன் முதலீட்டு நடவடிக்கையாக இனங்காணப்பட்டிருந்தது. ஆயினும் இது நிதியிடல் நடவடிக்கைகளின் கீழ் வகைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) பலர் காசு உட்பாய்வுகளை அடைப்புக்குறி இன்றியும் வெளிப்பாய்வுகளை அடைப்புக்குறியுடனும் காட்டுவதற்குத் தவறியிருந்தனர்.

(4) தேய்மானச் சீராக்கம் பிழையாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. விற்பனை செய்யப்பட்ட இயந்திரத்திற்கான தேய்மானம் திரண்ட தேய்மானக் கணக்கிலிருந்து அகற்றப்படவில்லை. இது பிழையான தேய்மானக் கட்டணத்தை விளைவாக்கியதுடன் இயந்திர விற்பனை இலாபத்திற்குப் பதிலாக நட்டத்தைக் காட்ட வழிவகுத்தது.

(5) வாகன விற்பனை மூலமான இலாபம் தவறாகக் கணிப்பிடப்பட்டிருந்தது. கவனிக்கத்தக்க அளவிலான பரீட்சார்த்திகள் சொத்தானது முற்றாகத் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது என்பதை கவனத்திற் கொள்ளவில்லை. இது தவறான தேய்மானக் கட்டணத்தைக் கணிப்பிட வழிவகுத்தது.

(6) சில பரீட்சார்த்திகள் தொடர்புடைய சொத்துக் கணக்கில் இருந்து விற்பனை செய்யப்பட்ட இயந்திரத்தின் கிரயத்தை மாற்றாததன் காரணமாக புதிய இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவைச் சரியாகக் கணிப்பிடவில்லை.

(7) சில பரீட்சார்த்திகள் வரிக்கு முந்திய இலாபம், வருமான வரிக் கொடுப்பனவு, கடன்கள் மீதான வட்டிச் செலவினம் போன்றவற்றைத் தவறாகக் கணிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வரிக்கு முன்னரான இலாபத்தைக் கணிப்பதற்கு வரிக்குப் பின்னரான இலாபத்துடன் சேர்க்க வேண்டிய வரிச் செலவினங்களை அதிலிருந்து கழித்திருந்தனர்.

(8) குறைந்தளவான பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றுக்கான தொகைகளை, மாற்றங்களைக் காட்டும் கூற்றிற்குப் பதிலாக நேரடியாக காசுப் பாய்வுக் கூற்றுக்கு எடுத்திருந்தனர்.

## வினா இல. 06

பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக இல்லை. குறிப்பாக, வினாவின் பகுதி **(b)** இற்கு மிகக் குறைந்தளவான பரீட்சார்த்திகளே 50% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(a)** இங்கு, குறுகிய கால ஊழியர் நன்மைகளை இரண்டு உதாரணங்களுடன் விபரிக்குமாறு கேட்கப்பட்டது. ஒரு சில பரீட்சார்த்திகளே குறுகிய கால ஊழியர் நன்மைகள் பற்றிச் சரியாக விபரித்திருந்தனர். பல பரீட்சார்த்திகள், ஊழியர்கள் தொடர்புடைய சேவைகளை வழங்கும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதி முடிவடைந்த பின்னரான 12 மாதங்களுக்குள் முற்றாகத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய இந்த நன்மைகளைக் குறிப்பிடத் தவறியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதி பற்றிய அறிவு குறைவாக இருந்ததால் பல்வேறு தவறான பார்வைகளை இது தொடர்பில் கொண்டிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

சில விடைகள் தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் மற்றும் தொழில் முடிவுறுத்தல் நன்மைகள் ஆகியவற்றை குறுகிய கால நன்மைகளின் ஒரு பகுதியாக உள்ளடக்கியிருந்தனர். உதாரணமாக, EPF, ETF மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் என்பவற்றை குறுகிய கால நன்மைகளுக்கான உதாரணங்களாக வழங்கியிருந்தனர்.

**(b)** வினாவின் இப்பகுதியானது குத்தகைதாரரின் 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான குத்தகை வருமதி பேரேட்டுக் கணக்கு மற்றும் ஈட்டப்படாத நிதி வருமான பேரேட்டுக் கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்குமாறு கேட்டிருந்தது. ஒரு சிலர் மாத்திரமே இப்பகுதிக்குச் சரியாக விடை அளித்திருந்தனர். கீழ்வரும் தவறுகள் பல பரீட்சார்த்திகளால் விடப்பட்டிருந்தன:

(1) பரீட்சார்த்திகள் கிடைத்த முற்பணம், வருடாந்தக் குத்தகைத் தவணைக்கட்டணம், மோட்டார் வாகனத்தின் சீர்மதிப்பு ஆகியவற்றைப் பதிவு செய்வதன் மூலம் குத்தகை வருமானக் கணக்கைத் தயாரிக்கும்போது பதிவுகளை வரவு, மற்றும் செலவுப் பக்கங்களில் பக்கம் மாறிப் பதிவு செய்திருந்தனர்.

(2) பல பரீட்சார்த்திகள் கொடுப்பனவுகளை கழிவீடு செய்ததன் மூலம் ஆகக் குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் இற்றைப் பெறுமதியைக் மீள்கணிப்பீடு செய்திருந்ததுடன் முழு ஐந்து ஆண்டுகளுக்குமான குத்தகை கடன் தீர்ப்பனவு அட்டவணையையும் காட்டியிருந்தனர். அவர்கள் தேவையற்ற விதத்தில் அதிக நேரத்தைச் செலவிட்டிருந்தனர்.

(3) குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான மாணவர்கள் தொடர்புடைய தொகைகளைச் சரியாகப் பெற்றிருந்த போதிலும் அவற்றை பேரேட்டுக் கணக்கில் உள்ளிடுவதற்குத் தவறியிருந்தனர்.

(4) சொற்பளவிலான விடைகள் ஈட்டப்படாத வட்டி வருமானக் கணக்கை உள்ளடக்கி இருந்தன எனினும் அவற்றில் பல தவறானதாக இருந்தன.

(5) சில பரீட்சார்த்திகள் கணக்கில் உள்ள ஏனைய மூலகங்களைச் சரியாக எடுத்திருந்த போதிலும் முன் கொண்டு வந்த மீதி, முன் கொண்டு சென்ற மீதி ஆகியவற்றை எழுதியிருக்கவில்லை.

**வினா இல. 07**

**(a)** இவ்வினா LKAS 37 – ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் என்ற நியமம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. கீழே தரப்பட்ட மூன்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு, அவ்வொவ்வொரு நிகழ்வும் LKAS 37 இன் பிரகாரம் எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும் என்பதை விபரிக்குமாறு கேட்டிருந்தது. வினாவின் இப்பகுதிக்கு பல பரீட்சார்த்திகளால் சராசரி அளவிலான புள்ளிகள் பெறப்பட்டிருந்தன.

(1) கம்பனியால் விற்பனை செய்யப்பட்ட பொருளொன்றைப் பயன்படுத்தியதன் பின்னர் ஏற்பட்ட சுகாதாரப் பாதிப்பு காரணமாக ரூபா 1 மில்லியன் இழப்பீடு கோரி வாடிக்கையாளர் ஒருவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்தத் தொகையைச் செலுத்துவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது என கம்பனியின் வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர் எனத் தரப்பட்டிருந்த போதிலும் ரூபா 1 மில்லியனுக்கு ஏற்பாடொன்றைச் செய்ய பெரும்பாலான பரீட்சார்த்திகள் முன்மொழிந்திருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள், கொடுப்பனவு செய்வதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது என்ற மதிப்பீட்டுடன் உரிமைக் கோரிக்கையின் தன்மை மற்றும் தொகையை விளக்கும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் நிகழத்தக்க ஒரு பொறுப்பாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என சரியாகக் குறிப்பிட்டிருந்தனர்.

(2) 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபத்தின் மீதான பங்கிலாபத்தை 2024 ஏப்ரல் 10 இல் கம்பனி வெளிப்படுத்தியது. சராசரி அளவிலான பரீட்சார்த்திகள், நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துகை செய்யப்பட வேண்டும் என சரியாக விபரித்திருந்தனர்.

(3) வருமான வரிப் பொறுப்பைக் கணிப்பிடும்போது, கம்பனியால் அனுமதிக்கத்தக்க செலவினங் களாகக் கவனத்திற் கொள்ளப்பட்ட ரூபா 2 மில்லியன் பெறுமதியான சில செலவினங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அனுமதியாது மதிப்பீடொன்றைச் செய்துள்ளது. பல

கலந்துரையாடல்களுக்குப் பின்னர், IRD ஆனது 2024 ஏப்ரல் 30 இல் ரூபா 1.5 மில்லியன் வரையில் அனுமதியாதிருக்க ஒப்புக்கொண்டது. சராசரி அளவிலான பரீட்சார்த்திகள், நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடொன்று செய்யப்பட வேண்டும் எனச் சரியாகக் குறிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலானவர்கள், ரூபா 1.5 மில்லியனாக உள்ள அனுமதிக்க முடியாத செலவுகள் காரணமாக, ஏற்பாட்டை அதிகரிக்க வேண்டுமா என்ற கேள்வியைப் புரிந்து கொள்ளத் தவறியிருந்தனர்.

பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்ட விடைகளில் அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழ்வருமாறு:

(1) சம்பவங்கள் சீராக்கம் செய்யப்பட வேண்டும், சீராக்கம் செய்யப்படவோ அல்லது வெளிப்படுத்தப்படவோ தேவையில்லை எனக் குறிப்பிடாது, சில பரீட்சார்த்திகள் அது ஒரு நிகழத்தக்க பொறுப்பு அல்லது நிகழத்தக்க சொத்து என மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர். வேறு சிலர் வழங்கப்பட வேண்டும் அல்லது வழங்கப்படத் தேவையில்லை எனக் குறிப்பிட்டிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் நிதிக் கூற்றுக்களில் நிகழ்வுகளின் வகையை (ஏற்பாடு, நிகழத்தக்க பொறுப்பு, நிகழத்தக்க சொத்து அல்லது அவை எதுவுமில்லை) அல்லது குறைந்தபட்சம் அவை எவ்வாறு ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும் என்பதை விபரிக்காமல் அதாவது வெளிப்படுத்தல் அல்லது சீராக்கத்தைச் செய்யாது, நிதிக் கூற்றுக்களில் ஏற்பிசைவு செய்யப்பட வேண்டும் என்பது போன்ற தெளிவற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

(3) சில விடைகள் ஒரு சில பரீட்சார்த்திகள் LKAS 37 ஐயும் LKAS 11 (அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்) ஐயும் போட்டுக் குழப்பியிருந்தனர். ஏனெனில் சில விடைகள் பிந்தையவற்றின் கொள்கைகளை முதன்மையாக வலியுறுத்தியிருந்தன.

**(b) (i) தகைமைச் சொத்துக்கள்:**

இங்கு, LKAS 23 – கடன்பெறுகைக் கிரயத்தின்படி தகைமைச் சொத்து என்னும் பதத்தை உதாரணம் ஒன்றுடன் விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவின் இப்பகுதிக்கு சரியாக விடை அளித்திருக்கவில்லை. இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.

சில பரீட்சார்த்திகள் தகைமைச் சொத்து என்பது LKAS 01 இல் குறித்துரைக்கப்பட்டவாறான பண்புகள் மற்றும் ஏற்பிசைவுத் தேர்வு நிபந்தனைகளைப் பூர்த்தி செய்கின்ற சொத்து எனக் கருதியிருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே தங்களுடைய விடைகளில் 'கணிசமான காலப்பகுதி' என்ற பிரதான பதத்தை உள்ளடக்கியிருந்தனர். மேலும் சில பரீட்சார்த்திகள் LKAS 23 – கடன்பெறுகைக் கிரயம் பற்றிய அறிவைக் கொண்டிருக்காததால் அதற்கான உதாரணங்களை வழங்க முடியாதிருந்தனர்.

**(ii)** வினாவின் இப்பகுதியானது LKAs 23 இன்படி, கடன்பெறுகைக் கிரயத்தின் மூலதனவாக் கத்தைத் தொடங்குவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஒரு நிபந்தனையைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் கடன்பெறுகைக் கிரயத்தின் மூலதனவாக்கத்தைத் தொடங்குவதற்கான நிபந்தனையைச் சரியாகக் குறிப்பிடத் தவறியிருந்தனர். மூலதனவாக்கத்தைத் தொடங்குவதற்கான தேர்வுநிபந்தனைகளைப் பட்டியலிடுவதற்குப் பதிலாக, சிலர் கடன்பெறுகைக் கிரயத்தின் மூலதனவாக்கத்தைக் கருத்திற் கொள்வதற்குத் திருப்தி செய்ய வேண்டிய முதன்மை நிபந்தனைகளில் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தனர். உதாரணம்: விசேடமாக, சொத்தினை அபிவிருத்தி செய்வதற்காக நிதியினைக் கடனாக வாங்குதல்.

## பகுதி C

### வினா இல. 08

இது ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் உள்ளிட்ட நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகள் நல்ல புள்ளிகளைப் பெற்றிருந்ததுடன் மிகச் சிலரே இவ்வினாவுக்கு விடை அளிக்காததைக் காணக்கூடியதாக இருந்தது. பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகள் கீழ்வருமாறு:

(1) அதிகமான பரீட்சார்த்திகள் கடன்பெறுகைக் கிரயம் மீதான வட்டியைச் சரியாகக் கணிப்பிடவும் மூலதனமாக்கப்பட வேண்டிய தொகையை இனங்காணவும் தவறியிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் ஆண்டிற்கான வருமான வரிச் செலவினத்தை இனங்காணவில்லை. அவர்கள் ஆண்டிற்கான வருமான வரிச் செலவினமாக, செலுத்த வேண்டிய தொகையைக் கருத்திற் கொண்டிருந்தனர்.

(3) சிலர் உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பான கூற்றில் காலப்பகுதிக்கான இலாபம் மற்றும் பங்கிலாபத்தைப் பதிவு செய்ய அலட்சியமாக மறந்திருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் பங்கு மூலதனத்திற்குச் செலுத்திய பங்கிலாபத்தைச் சீராக்கம் செய்திருந்தனர். அத்துடன், ஒரு சிலர் கைக்கொள் இலாபத்திற்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபத்தைச் சேர்த்திருந்தனர். இது தவறானதாகும்.

(5) அதிகமான பரீட்சார்த்திகள் விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்கான தேய்மானக் கணிப்பீட்டைப் பிழையாகச் செய்திருந்ததால், விற்பனை இலாபத்தைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

(6) குறிப்பிடத்தக்க அளவிலான பரீட்சார்த்திகள் காலக் கடன்களின் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பகுதிகளை வேறுபிரித்தறியத் தவறியிருந்தனர்.

(7) அதிகளவானவர்கள் இயந்திரத்தின் சேத இழப்பைக் கணிப்பிடத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சேத இழப்பினை PPE அட்டவணை மற்றும் வருமானக் கூற்று ஆகியவற்றில் பதிவு செய்யவில்லை. இது சேத இழப்பு பற்றிய அறிவின்மையாக இருக்கலாம்.

(8) கடன்பட்டோர் கணக்கில் தவறுதலாக செலவு வைக்கப்பட்ட அறவிடமுடியாக் கடன் ரூபா 1400 இன் வசூலிப்பைச் சேர்க்காது அறவிடமுடியாக் கடனுக்கான ஏற்பாடு கணிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், பல பரீட்சார்த்திகள் அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டிற்கு செய்யப்பட வேண்டிய தள்ளுபடிகளை ஏற்பிசைவு செய்யத் தவறியிருந்தனர். மேலும், அறவிட முடியாக் கடனுக்கான மேலதிக ஏற்பாட்டின் தள்ளுபடிக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சரியான செய்கைகள் தொடர்பிலும் ஏற்கனவே பதிவழிப்புச் செய்யப்பட்ட வசூலிப்புகளை ஏற்பிசைவு செய்வது தொடர்பிலும் போதிய அறிவு காணப்படாததை அவதானிக்க முடிந்தது.

(9) குறிப்பிடத்தக்க அளவிலான பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றில், வட்டி வருமதிகள் மற்றும் முற்கொடுப்பனவு மீதிகள், அட்டுறு செலவினங்கள், தொக்குகள் ஆகியவற்றைக் காட்டுவதற்குத் தவறியிருந்தனர்.

(10) ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்ற அட்டவணையிலிருந்து கணிப்பிடப்பட்ட தேய்மானச் செலவினை நிருவாக மற்றும் விநியோகச் செலவினத்தின் கீழ் வருமானக் கூற்றிற்குக் கொண்டு வரத் தவறியிருந்தனர்.

**வினா இல. 09**

இவ்வினா ஐந்து விகிதங்களைக் கணிக்குமாறும் கம்பனி விகிதத்தை தொழிற்றுறைச் சராசரிகளுடன் ஒப்பீடு செய்து, முரண்களுக்கான சாத்தியமான காரணங்களை விபரித்து பொழிப்பு அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறும் கேட்டிருந்தது. அதிகமான பரீட்சார்த்திகள் விகிதங்களைக் கணித்து, கணிப்பீட்டுப் பகுதிக்காக ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பொழிப்பு அறிக்கையைத் தயாரிப்பதற்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(a)** விகிதங்களைக் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகளால் கீழ்வரும் தவறுகள் விடப்பட்டிருந்தன:

(1) சில பரீட்சார்த்திகள் மொத்த இலாப விகிதத்தைக் கணிப்பிடும்போது விற்பனைக்குப் பதிலாக விற்பனைக் கிரயத்தைக் கவனத்திற் கொண்டிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் நிகர இலாப விகிதத்தைக் கணிப்பிடும்போது வரிக்குப் பின்னரான இலாபத்திற்குப் பதிலாக வரிக்கு முன்னரான இலாபம் வரிக்கு முன்னரான இலாபமும் வட்டியும் போன்றவற்றைப் பயன்படுத்தியிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் கடன்பட்டோர் சேகரிப்புக் காலத்தைக் கணிப்பதற்கு கடன் விற்பனைக்குப் பதிலாக மொத்த விற்பனையைப் பயன்படுத்தியிருந்தனர். சிலர் சராசரி கடன்பட்டோருக்குப் பதிலாக இறுதிக் கடன்பட்டோரைப் பயன்படுத்தியிருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகள் கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலத்தைக் கணிப்பதற்கு கடன் கொள்வனவுகளுக்குப் பதிலாக மொத்தக் கொள்வனவுகளைப் பயன்படுத்தியிருந்தனர். அத்துடன், சராசரிக் கடன்கொடுத்தோருக்குப் பதிலாக இறுதி மீதியை அல்லது கடன்கொடுத்தோரின் மொத்த ஆரம்ப மற்றும் இறுதி மீதியைக் கவனத்திற் கொண்டிருந்தனர்.

(5) சில பரீட்சார்த்திகள் வரிக்குப் பின்னரான நிகர இலாபத்திற்குப் பதிலாக பங்குதாரர்களின் உரிமையாண்மை, வரிக்கு முன்னரான இலாபம், வட்டி மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் ஆகியவற்றைப் பயன்படுத்தி பங்கொன்றின் வருவாயைக் கணிப்பிட்டிருந்தனர்.

**(b)**

(1) சில பரீட்சார்த்திகள் முரண்களுக்கான சாத்தியமான காரணங்களை வழங்காது, விகிதங்களை ஒப்பீடு செய்து, தொழிற்றுறை செயலாற்றுகைகளுடன் ஒப்பிட்டு கம்பனியின் செயலாற்றுகை சாதகமானதா, பாதகமானதா எனக் குறிப்பிட்டிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் கம்பனி சார்ந்து பார்ப்பதற்குப் பதிலாக தொழிற்றுறை சார்பான பார்வையிலிருந்து கம்பனி விகிதத்தையும் தொழிற்றுறைச் சராசரி விகிதத்தையும் ஒப்பிட்டிருந்தனர்.

(3) பல பரீட்சார்த்திகள், கடன்கொடுத்தோருக்கான முன்கூட்டிய தீர்ப்பனவானது கம்பனிக்குச் சாதகமானது என்ற பார்வையைக் கொண்டிருந்தனர்.

(4) பல பரீட்சார்த்திகளிடம் கடன்பட்டோர் சேகரிப்புக் காலம் மற்றும் கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம் ஆகியவற்றின் முரண்களுக்கான காரணங்கள் பற்றிய அறிவு காணப்படாமையை அவதானிக்க முடிந்தது.

(5) சில பரீட்சார்த்திகள் தொழிற்றுறைச் சராசரியின் பங்கொன்றின் வருவாயுடனான முரண்களுக்கான காரணங்களை வழங்குவதற்குப் பதிலாக பங்கொன்றின் வருவாய் குறைவாக இருப்பதால் ஏற்படும் தாக்கம் பற்றி கலந்துரையாடியிருந்தனர்.

**வினா இல. 10**

இவ்வினா கொள்வனவு மீதான நன்மதிப்பைக் கணிப்பிடவும் ஒன்றிணைந்த நிதி நிலைக் கூற்றைத் தயாரிக்கவும் கோரியது.

பொதுவாக, பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்து, சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பெரும்பாலானவர்கள் ஒருங்கிணைவு என்ற எண்ணக்கரு மற்றும் தொடர்புடைய சீராக்கங்களை நன்கு புரிந்து கொண்டிருந்தனர். **பகுதி (a)** இற்கு பரீட்சார்த்திகள் நன்றாக விடை அளித்திருந்தனர்.

பரீட்சார்த்திகளால் விடப்பட்ட தவறுகள் கீழ்வருமாறு:

(1) சில பரீட்சார்த்திகள் இரண்டு கம்பனிகளினதும் நிதி நிலைக் கூற்றுக்களைத் தனித்தனியாக வழங்கியிருந்தனர்.

(2) இயந்திரத்தின் விற்பனை மீதான இலாபம் மற்றும் தொடர்புடைய தேய்மானம் ஆகியவற்றின் கணிப்பீடுகளில் வழுக்கள் காணப்பட்டன.

(3) தேறாத இலாபம் சரியாகக் கணிப்பிடப்படவோ, பதிவுசெய்யப்படவோ இல்லை.

(4) ஒருங்கிணைந்த கைக்கொள் இலாபம் மற்றும் கட்டுப்பாடற்றோர் நாட்டம் என்பன துல்லியமாக காணப்படவில்லை.

(5) அதிகளவான பரீட்சார்த்திகள் சீர் மதிப்பு முறையைப் பயன்படுத்தி, தாய்க் கம்பனிக்கும் கட்டுப்பாடற்றோர் நாட்டத்திற்கும் இடையில் நன்மதிப்பை ஒதுக்கீடு செய்யத் தவறியிருந்தனர்.

(6) கைக்கொள் இலாபத்தைக் கணிப்பிடும்போது, சில பரீட்சார்த்திகள் வரவுகள் மற்றும் செலவுகளைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறியிருந்தனர்.

(7) அதிகளவான பரீட்சார்த்திகள் கம்பனிக்கிடையிலான பரிவர்த்தனைகளை நீக்காது, தாய்க் கம்பனி மற்றும் துணைக் கம்பனியின் தொகைகளைக் கூட்டிச் சேர்த்ததன் மூலம் வினாவை எளிதாக அணுகியிருந்தனர்.

(8) ஒரு சில பரீட்சார்த்திகள் தாய்க் கம்பனி மற்றும் துணைக் கம்பனி ஆகிய இரண்டிற்கும் குறிப்பிடு மூலதனத்தைச் சேர்த்திருந்தனர். இது ஒன்றித்தல் பற்றிய அறிவின்மையைக் காட்டுகிறது.

- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக் கொள்ளும் மட்டத்தை அபிவிருத்தி செய்வதில் கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்:**

(1) பல பரீட்சார்த்திகள் விடைத்தாளில் வினா இலக்கங்களைக் குறிப்பிடவில்லை.

(2) பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி ஒரு புதிய வினாவுக்கான விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவில்லை.

(3) பரீட்சார்த்திகள் வினா இல. 01 இல் தொடங்கி வினா இல. 10 என்றவாறு ஒழுங்கு முறையில் விடை எழுதுகிறார்கள். இதனால், பல பரீட்சார்த்திகள் வினா இல. 10 இற்கு விடையெழுத வதில்லை.

(4) வினாத்தாளை வாசிக்க ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில் அனைத்து வினாக்களையும் வாசிப்பதோடு, பரீட்சார்த்திகளுக்கு சௌகரியமான வினாக்களிலிருந்து விடையெழுத ஆரம்பிக்க வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் ஏஏரீ இன் கற்றல் புத்தகத்தை கற்க வேண்டும் என்பதுடன் அதில் தரப்பட்டுள்ள உதாரணங்களைச் செய்து பார்த்து பயிற்சி பெறுதல் வேண்டும்.

(6) பரீட்சார்த்திகள் சாத்தியமான நேரங்களில் கடந்தகால வினாத்தாள்களை அதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தினுள் செய்து பார்த்து பயிற்சி பெறுவதுடன் நேர முகாமைத்துவத்திலும் பயிற்சி பெறுதல் வேண்டும்.

(7) வினாக்களைக் கவனமாக வாசிப்பதுடன் வினாவில் வழங்கப்பட்ட செயல் வினைச் சொற்களுடன் வினாவில் கேட்கப்பட்டதைப் புரிந்து கொள்ளுமாறு பரீட்சார்த்திகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

- * * * -